# நல்லூர், யாழ்ப்பாணம்

## முதலாம் தவணைப்பரீட்சை - 2014

தரம் - 10 நாடகமும் அரங்கியலும் நேரம் 1.00 மணி

பகுதி-1

மிகவும் சரியான விடையைக் குறிப்பிடுக.

1) நாடகம் போலச் செய்தல், எனக் கூறியவர்.
1.சேக்ஸ்பியர் 2. தொம்சன் 3. அரிஸ்டோடில் 4. தெஸ்பிஸ்

2) ஆற்றுகைக் கலைகளில் ஒன்று.
1.சிற்பம் 2. கட்டிடம் 3. ஓவியம் 4. நாடகம்

3) Drama என்பதன் கிரேக்க அடிச்சொல். Dramanon ஆகும். இது பின்வருவனவற்றில் எதனைக் குறிக்கின்றது?
1.நிகழ்த்திக் காட்டுதல் 2. முடிவைக்கூறுதல் 3. பார்ப்பவர்கள் 4. வேடஉடையை

4) மேடையில் பார்வையாளர் முன் தோன்றுபவர்.
1.நெறியாளர் 2. ஒளியமைப்பாளர் 3. ஒப்பனையாளர் 4. நடிகன்

5) நாடக எழுத்துருவை எழுதுபவர்.
1.மேடைமுகாமையாளர் 2. நாடகாசிரியர் 3. பாடலாசிரியர் 4. தயாரிப்பாளர்

6) நாடகம் ஒன்றிற்கு அவசியமானது.
1. மோதுகை 2. பாடல் 3. ஆடல் 4. காட்சியமைப்பு

7) “ஊமம்” என்றால்.
1. நல்ல நடிப்பு அல்ல 2. மொழியற்ற நடிப்பு 3. ஆடல் முறை ஒன்று 4. கூத்து

8) யானை நடக்கும் போது தும்பிக்கை அசைவது.
1. இயல்பான அசைவு 2. ஆக்கியல் அசைவு
3. பொருத்தப்பாடற்ற அசைவு 4. பார்ப்பதற்காகச் செய்கின்ற அசைவு.

9) “கூடி விளையாடு பாப்பா” என்ற நாடகத்தை எழுதியவர்.
1. குழந்தை ம. சண்முகலிங்கம் 2. வேலுசரவணன்
3. பாரதியார் 4. சேமலதாசுபசிங்க.

10) சிறுவர் நாடகம் என்பது.
1. சிறுவர்களால் நடிக்கப்படுவது. 2. சிறுவர்களும் பெரியவர்களும் இணைந்து நடிப்பது.
3. பெரியவர்களால் நடிக்கப்படுவது 4. மேற்கூறிய எல்லாம்.

11) முருகனுடன் சம்பந்தப்பட்ட சடங்கு.
1. விஜயதசமி 2. சூரன்போர் 3. யமசங்காரம் 4. திருவெம்பாவை

12) சடங்கு ஒன்றில்.
1. நாடகப் பண்புகள் காணப்படும் 2. எந்தவித நாடகப்பண்பும் காணப்படும்
3. வேட உடைகள் மட்டும் காணப்படும் 4. கதை ஒன்று மட்டும் காணப்படும்


kalvi.lk

13. சினிமாவில் நடிக்கும் நடிகர்கள்.

1. நடிப்பு அனுபவம் தேவையில்லை.
2. ஒப்பனை தேவையில்லை
3. கமராவின் முன் நடிக்க வேண்டும்
4. பார்வையாளர் முன் நடிக்க வேண்டும்

14) சிறுவர் நாடகம்.

1. எப்போதும் மிருகங்களை நடித்துக் காட்டுவது.
2. மாணவர்களின் கதையை மட்டும் நிகழ்த்திக் காட்டுவது.
3. நல்ல அறிவுரையைக் கூறுவது
4. மேற்கூறிய பண்புகளை கொண்டிருக்கலாம்.

15) இராவனேசன் என்ற கூற்று.

1. மகாபாரதக் கதையை அடிப்படையாகக் கொண்டது.
2. கண்ணகியின் கதையைக் கூறுவது.
3. இராவணனின் கதையைக் கூறுவது.
4. அருச்சுனனின் கதையைக் கூறுவது.

16) “இசை நாடகம்” என்பது.

1. பாடல்களை முதன்மையாகக் கொண்டது.
2. கூத்துக்கள் ஆகும்
3. பாடல் கச்சேரி ஆகும்
4. நாட்டிய நாடகம் ஆகும்.

17) பின்வருவனவற்றில் சிறுவர் நாடகம் எது?

1)புதியதொரு விடு
2. கோடை
3. கந்தன் கருணை
4. தப்பிவந்த தாடி ஆடு.

18) ஒப்பனை என்பது.

1. பாத்திரத்திற்கு பொருத்தமானதாக அமைய வேண்டும்.
2. அழகாணதாக அமைய வேண்டும்
3. விலை கூடிய பொருட்களால் செய்ய வேண்டும்.
4. நாடகத்திற்கு தேவையற்றது.

19) நாடகத்திற்கு இசையமைப்புச் செய்பவர்.

1. கட்டாயம் நடிக்கவும் வேண்டும்.
2. நாடகத்தை முழுமையாக அறிந்திருக்க வேண்டும்
3. கட்டாயம் வேடவுடை அணிய வேண்டும்.
4. மேடையில் அமர வேண்டும்.

20) புத்தாக்கம் செய்யும் போது.

1. பாத்திரமாக மாற வேண்டும்.
2. கதையை நிகழ்த்த் வேண்டும்
3. குழுவாகவும் நிகழ்த்தலாம்
4. மேற் கூறிய யாவும் சரி.

(20x2= புள்ளிகள்)

## பகுதி-2

வினா(1) உட்பட 5 வினாக்களிற்கு விடை தருக.

01)
1. உமது பாடப்பரப்பில் கற்கின்ற இரண்டு நாடகங்களின் பெயர் தருக.
2. தமிழ் மரபு வழி நாடகம் எவ்வாறு அழைககப்படுகிறது?
3. நீர் அறிந்த நாடகாசிரியர் இருவரின் பெயர் தருக.
4. கிறிஸ்தவ சடங்கு ஒன்று தருக.
5. “கட்புலக் கலை” என ஏன் கூறப்படுகிறது?
6. பார்போர் கூடும் இடம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
7. குரற்பயிற்சியாக அமையக் கூடிய அரங்க விளையாட்டு தருக.
8. வானொலி நாடகத்தின் சிறப்பு என்ன?
9. நாடக நிறுவனம் ஒன்றைக் குறிப்பிடுக.
10. சிறுவர் நாடகத்தின் பண்புகள் 3 கூறுக.



kalvi.lk

02)

1. விழிப்பு நாடகத்தின் கரு யாது? ( 2 புள்ளி)

2. விழிப்பு நாடகப் பாத்திரம் 4 குறிப்பிடுக. ( 4 புள்ளி)

3. செல்வியின் குணவியல்பு 2 குறிப்பிடுக. ( 4 புள்ளி)

4. விழிப்பு நாடகத்திற்கான பாடலை எழுதியுவர் யார்? ( 2 புள்ளி)

03)

1. நுண்கலைகள் 3 பெயர் தருக. ( 3 புள்ளி)

2. வெளிக்கலை 2 குறிப்பிடுக. ( 2 புள்ளி)

3. கட்புலக் கலை 2 குறிப்பிடுக. ( 2 புள்ளி)

4. சடங்குகள் 3 குறிப்பிடுக. ( 3 புள்ளி)

5. சடங்கிற்கும் நாடகத்திற்கும் இடையிலான ஓற்றுமை ஓன்று தருக. ( 2 புள்ளி)

04)

1. இயல்பான அசைவுகள் 3 தருக. ( 3 புள்ளி)

2. ஆக்கியல் அசைவுகள் 2 தருக. ( 2 புள்ளி)

3. நாடகத்தில் ஆடல்கள் பயன்படுத்தப்படும் தேவையை குறிபபிடுக. ( 3 புள்ளி)

4. சிறுவர் நாடகத்தில் ஆடல்களை இணைப்பதால் ஏற்படும் பயன்கள் 2 தருக. ( 4 புள்ளி)

05) 1. அரங்க விளையாட்டுக்கள் 4 தருக? ( 4 புள்ளி)

2. இரண்டு அரங்க விளையாட்டைக் குறிப்பிட்டு, சுருக்கமாக விளக்குக? ( 6 புள்ளி)

3. அரங்க விளையாட்டு ஏன் விளையாடப்படுகிறது? ( 2 புள்ளி)

06) 1. நடிகனிற்கான பயிற்சிகள் எவை? ( 3 புள்ளி)

2. அரங்கப் பயிற்சிகளிநூடாக நடிகன் பெறும் பயன்கள் எவை? ( 6 புள்ளி)

3. நடிகன் பேசுவதற்குரிய அடிப்படைப் பயிற்சி எது? ( 3 புள்ளி)

07

1. நால்வகை அபிநயம் எவை? ( 4 புள்ளி)

2. அவற்னுாள் இரண்டை விளக்குக. ( 6 புள்ளி)

3. ஊமத்திற்கு தேவைப்படாத அபிநயம் எது? ( 2 புள்ளி)


kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk


2025
1ம் தவணை வகுப்புகள்
தரம் 6 முதல் 11 வரையான
மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில
மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.
ஆரம்பம் 01.01.2025
இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.
அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...
Education கல்வி
Kalvi.lk
Whatsapp
075 287 1457